REGD No. M. 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம் | விலை அணா 2

மலர் 9 | 6—5—51 | இதழ் 46

சபதம் கொள்வோம்!

வியர்வையை விருந்தாகப் படைப்போர், விழா, கொண்டாடியிருக்கின்றனர் — உலக முழுமையும்.

பாட்டாளி வர்க்கம், கடந்த மே முதல் நாள், தனது உரிமைக் குரலை பல் வேறு நாடுகளிலும் எழுப்பியிருக்கிறது--ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், சொற் பொழிவுகள் மூலம்.

உழைத்து மடியும் மக்கள் நிறைந்த திராவிட சமுதாயத்தின் குரலான நாமும், நமது கிளைக் கழகங்களும் மேதினத்தைக் கொண்டாடியிருக்கிறோம்.

மே தினம் — உழைப்போனும், மனிதனே என்று மேட்டுக் குடியினரின் செவிட்டுக் காதுகளில் சங்கநாதம் செய்விக்கும், நாள். தடிகொண்டு விரட்டும் தசைப் பொதிகளுக்கு, வளர்ந்து வரும் சமதர்மப் புயலை நினைவூட்டும் தினம். உழைப்பவன் ஒருவனும்; அவன் உழைப்பில், மெருகு கலையாத மேனி, அலுங்காத ஆடை, அழகான வாழ்க்கை பெற்று அனுபவிக்க மற்றொருவனும் சமுதாய அமைப்பில் இருப்பது ஏன்? என்ற கேள்வியை எல்லோர் இதயத்திலும் எழுப்பும் பாட்டாளியின் திருவிழா நாள்.

கடந்த ஆண்டுகளைவிட இப்போது, தொழிலாளர் உலகின் குரலிலே புதுத் தெம்பும், வேகமும், அதிகமாக வளர்ந்திருக்கிறது — முதலாளித்துவ மோகனப் புன்னகையில் மயங்கி நிற்கும் ஆளவந்தாரின் அடக்குமுறை அதிகமாகியிருந்தும், பாட்டாளி வர்க்கம் பணியவில்லை; அவர்கள் சக்தி அழியவுமில்லை.

எங்கும் பொதுவுடைமை நாதம்! சமதர்ம கீதம்!!

இந்தச் சூழ்நிலை — வளரும் உரிமைப் போரின் நற்காட்சி.

இதைக் காண நாம், மகிழ்கிறோம். பாட்டாளி வர்க்கம் கட்சி பேதக் காற்றில் சிக்கி, சுயநலச் சூறாவளிக்கு இரையாகி, சிதைந்து போகாமல்; வளரவேண்டும் என்ற நம் ஆசை ஓரளவு நிறைவேறி வருகிறது — ஆகவேதான், மகிழ்ச்சி, நமக்கு.

புது வலிவூட்டும், மே தின நாளில், நமது அன்பு கலந்த உழைப்பை, பாடுபடும் வர்க்கத்துக்கு மென்மேலும் பயன்படுத்த, சபதம் எடுத்துக் கொள்வோம்.

நாம் — பாடுபட்டு மடியும் ஒரு சமுதாயத்தின் நல்லெண்ணத் தூதுவர்கள். நமது இனம், உழைப்

(5-ம் பக்கம் பார்க்க)

கழகப் பணி

[அண்ணாதுரை]

கோயில்பட்டி
கடம்பூர்
எட்டையாபுரம்
கொளத்தூர்
ஏரல்
நாசரத்
பணகுடி
திசையன்விளை
மேலப்பாளயம்
முக்கூடல்.

நெல்லை மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் வள்ளிமுத்து அவர்களின் ஏற்பாட்டின் படி இந்தத் திங்கள் 15-தேதியிலிருந்து 20-வரையில், மேற்கண்ட ஊர்களில், சுற்றுப்பயணம் செய்தேன். நெல்லை மாவட்டம், எந்த அளவுக்குப் பண்பட்டு இருக்கிறது என்பதை அறியும் வாய்ப்பு கிடைத்தது. எங்கும் எழுச்சி மயம்! நாளொன்றுக்கு இரண்டு கூட்டங்கள். ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லும் வழியில், பல சிற்றூர்களிலே வரவேற்புகளும் நல்லுரைகளும்! ஒவ்வொரு கூட்டமும், அதுவரை அந்த ஊரிலே நடைபெற்றிராத அளவுடையது என்று பொதுமக்கள் பேசிக்கொள்ளும் விதமாக இருந்தது. நெல்லை மாவட்டம் என்றால், பொதுவாக, தூத்துக்குடி, கோயில்பட்டி, எனும் இரண்டோர் நகரங்களின் பெயர் மட்டுமே நினைவிற்கு வருவது வழக்கம். இந்த ஐந்து நாட்கள், மாவட்டத்தின் உட்புற ஊர்களில் நான் கண்ட ஆர்வம், உண்மையிலேயே பிரமிக்கத்தக்கதாக இருந்தது. இந்த ஊர்களிலெல்லாம், வீரமிக்க இளைஞர்கள், பணிபுரிந்து வருகின்றனர். ஊர்ப் பெரியவர்களும், நமது இயக்கம் நாட்டுமக்களின் நலிவைப் போக்கும் மாமருந்து என்று கூறி வரவேற்கின்றனர். பல இடங்களில், இயக்க அலுவலகம், படிப்பகம் ஆகியவைகள் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளன, பொதுக்கூட்ட ஏற்பாடுகளும் திறமையுடன் செய்யப்பட்டன. பொதுவாக, இயக்கத் தொடர்பு அதிகமாக உள்ள பெரிய நகர்களில் சங்கு பிடித்ததும் கூட்டம் கலைவது—ரயில் நேரம் வந்ததும் கூட்டம் குறைவது—என்ற நிலைமை இருந்திடக் காண்கிறோம். நெல்லை மாவட்ட உட்புற ஊர்களிலே கூட்டப்பட்ட பொதுக் கூட்டங்களிலே இது போன்ற நிலை, தலைகாட்டவே இல்லை. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்து கூடியவர்களும் உள்ளூர்த் தோழர்களும், அன்றைய கூட்டத்தைத் தங்களுக்குக் கிடைத்த நல்லதோர் வாய்ப்பு, எனவே அதனைக் குறைவறப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கொண்டு, வைதிகர்கள் திருவிழாவுக்கு எப்படித் திரண்டு வருவார்களோ குடும்பத்துடன், அதுபோல, (ஆனால் கருத்தற்ற முறையில் அல்ல) ஆயிரக்கணக்கில் திரண்டுவந்து, நடுநிசிக்குப் பிறகும், எழுச்சி குன்றாத வகையில், கூட்டத்தை நடத்திக் கொடுத்தனர்.

நடுநிசி—என்று நான் கூறுவது, சொல்லலங்காரத்துக்கு அல்ல! உண்மையாகவேதான்!

முக்கூடல், கூட்டத்துக்கு நாங்கள் சென்றபோது, ஏறக்குறைய மணி பனிரெண்டு—இரவு! இரண்டு மணி வரையில் கூட்டம்.

திசையன்விளையில், கூட்டம் முடித்துவிட்டு, இயக்கத் தோழர்களின் அன்பு கலந்த அறுசுவை உணவைச் சாப்பிட உட்கார்ந்த போது மணி இரண்டு—இரவு!

ஒவ்வொரு ஊரிலும், பொதுக் கூட்டத்தைத் 'தனி மாநாடு' போலவே நடத்தினர். ஊரெங்கும் அலங்கார வளைவுகள், வரவேற்பு வளைவுகள், அறிவுரை அட்டைகள், மேளதாளம், கொடி ஊர்வலம், வேட்டு முழக்கங்கள்!

ஏரல் தோழர்கள் நடத்திய ஊர்வலத்திலே, கொடி ஏந்திச் சென்றதுடன், சிலர் ஏர் கலப்பையையும் எடுத்துச் சென்ற காட்சி, உழவர்களின் உள்ளம் நம் பக்கம் இருப்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

பல ஊர்களில், இன்று நமது இயக்கப் பணியாற்றுபவர்கள், முன்பு காங்கிரசில் இருந்தவர்கள்! இருந்தவர்கள் என்றால்,—ஒப்புக்கு, மூலையில், இருந்தவர்கள் அல்ல! முன்னணி இருந்தவர்கள்! காங்கிரசின் வளர்ச்சிக்காகக் கஷ்டநஷ்டம் பெற்றவர்கள். தங்கள் உழைப்பு, உலுத்தர் வாழ்வுக்குப் பயன்படுத்தப்படுவது கண்டு உள்ளம் நொந்து, ஊராளும் கட்சியாக உயர்ந்து விட்ட காங்கிரஸ், உண்மை ஊழியர்களையும், ஊர்மக்கள் நலத்தையும் புறக்கணித்துவிட்டு, கபடவேடதாரிகளுக்கும் கள்ளமார்க்கட் கழுகுகளுக்கும் சாமரம் வீசிக்கொண்டு கிடக்கும் கேவலத் தன்மையைக் காணச் சகியாது, வெளியேறி, இனி எவ்வளவு கஷ்ட நஷ்டம் ஏற்றுக் கொண்டாகிலும் நாட்டுக்கு நல்லாட்சி அமைத்தாக வேண்டும் என்ற ஆர்வக்கனல் மூண்ட நிலையிலே, மக்கள் கட்சியாகிய தி. மு. கழகத்திலே சேர்ந்து சிறந்த முறையிலே பணியாற்றுகின்றனர். தேசியக் கவி பாரதியார் பிறந்த எட்டையாபுரத்திலே, இத்தகு தோழர்கள் பலர் இருக்கக் கண்டேன்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டு கொழுத்திருப்போரை நிந்தனை செய்வோம்—என்று பாடிய பாரதியாரின் பெயர் கூறி ஓட்டு வேட்டையாடியவர்களின் ஆட்சியிலே புளியங்கொட்டையும் பிண்ணாக்கும் புசிப்பதற்குக் கிடைக்குமா என்ற கோர நிலைமை ஏற்பட்டது கண்டால், எட்டையாபுரம் துடிதுடிக்காமலிருக்க முடியுமா! திராவிட இயக்கத்தை அவ்வூர்த் தோழர்கள் வரவேற்கும் காரணம் அதுதான்.

சைவப் பெரியார்கள் நிரம்பிய வட்டம், நெல்லை—அத்துடன் மத சம்பந்தமாக ஞானசூன்யர் என்ற எண்ணம் கொண்டவர் அதிகம், அந்தப் பகுதியில்—போதல்ல பத்தாண்டுகளுக்கு முன்வரை! இப்போது, நாம் சம்பந்தமாக எடுத்துக் காட்டும் கருத்துகளை அவர்கள் பாராட்டுகிறார்கள். மக்கள் மனமாசு போக்கும் மாண்புடைய செயல் புரிவது திராவிட இயக்கம் என்பதை உணர்ந்து உவகை கொள்கின்றனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

"பூமாலே பூ...மா...லே!! பெயரைப் பார்த்தேளா, சார்" என்று கேட்டார், பண்ணைக்கார பரமசிவமுதலியார், பக்கத்திலேயிருந்த பரமார்த்திக அய்யங்காரை.

"நாமம், நன்னுத்தான் இருக்கு. ஆனா, நமக்குச் சரிப்படுவாளோன்னுதான் பார்க்கிறேன்'! என்றார், அவர்.

'நமக்கு' என்ற பதம், முதலியாருக்கும் பரமார்த்திகருக்கும் பொதுவானவள், பூமாலை, என்பதற்காக அல்ல, அவரால் உபயோகிக்கப்பட்டது. 'உங்களுக்கு'— என்று சொல்வதைவிட 'நமக்கு' என்று கூறினால் பாசம்நேசம் விளங்குகிறதல்லவா! ஆகவேதான், புத்தி தீட்சண்யத்தோடு அந்தப் பதத்தைப் போட்டார் அய்யங்கார்.

"எங்கே, சார்! பார்த்தாலே, தெரியலையா? எங்கே பிரயோஜனப் படப்போறா......நான் அப்பவே சொன்னேன் சார், பரமன்கிட்டே. ....வீண் தண்டம். ரூபா நூறு சார், நூறு! போயிடும் போலேருக்கே!" வேதனையோடு பேசினார் முதலியார்.

வெற்றிலைப் பெட்டியை எடுத்து, "கொழுந்து வெற்றிலை இப்போதெல்லாம் கிடைக்கிறதில்லையோ?" என்று கேள்வியொன்றைக் கேட்டுக் கொண்டு சுண்ணாம்பைத் தடவி, மடித்துக்கொண்டிருந்த பரமாத்திகர், பூமாலையை மீண்டுமொருமுறை ஏற இறங்கப் பார்த்தார்.

பூமாலையோ, குனிந்த தலை நிமிரவில்லை. பூமியைப் பார்த்தவாறே நின்றுகொண்டிருந்தாள். தலையிலே கட்டியிருந்த தாழம்பூ, கனம் வேறு! அதோடு பக்கத்திலே மாப்பிள்ளை நிற்பதால் உண்டான கூச்சம் வேறு! அதோடு, எதிரே தன்னைப்பற்றி எஜமான் பேசுவதால் ஏற்பட்ட பயம் வேறு!

ஓரக்கண்கொண்டு அவனைக் கவனித்தான், பொன்னன்—மாப்பிள்ளை. அவன் மனது, தார்போட்ட காளைபோலாகிக் கொண்டிருந்தது, எஜமானும் 'ஏஜண்ட்' ஐயாவும் பேசுவதைக் கேட்க, கேட்க. என்ன செய்வான்! அவன் ஏழை—அதுவும் உழவன்!!

கணக்கு — தீர்ந்தது!

அண்ணல்

நிமிர்ந்து தன் 'அப்பனைப் பார்த்தான். பரமன்—அவன், அப்பன்—கைகளைக்கட்டிக் கொண்டு, தன் பந்துமித்திரர்களோடு நின்று கொண்டிருந்தான். அவனது 'பந்து மித்திரர்கள்' சீர்வரிசைகள், கல்யாணப்பரிசுகள், ஆகியவைகளோடு நின்றுகொண்டிருந்தனர். அவர்களோடு, கல்யாண ஊர்வலத்தை முன்னிட்டு வரவழைக்கப்பட்ட 'மேளக்காரர்கள்' தங்களதுகச்சேரி 'செட்'டோடு 'எப்போதும் ரெடி' என்று சொல்வதுபோல நின்று கொண்டிருந்தனர்.

"ஏய்......கழுதே!" என்று கத்தினார், முதலியார். அவர் கூப்பாட்டில், ஆத்திரம் தொனித்தது. யாரைக் கூப்பிடுகிறார் என்று தெரியாமல் பரமனும் பொன்னனும் விழித்தனர்!

வீட்டினுள்ளிருந்து ஓடிவந்தான். 'கழுதை' என்று, அழைக்கப்பட்ட சோமு—பண்ணைத் தலையாரி.

"ஏதாவது கொண்டாந்து போட்டு, போகச்சொல்லு சனியன்களை!" என்று சலிப்போடு சொன்னார் முதலியார்.

இரண்டு படி நெல் வந்தது, பொன்னன் தன் துணியை விரித்தான். சோமு அதில் கொட்டினான். தம்பதிகள்ஐயாவை 'நமஸ்காரம்' செய்தனர்.

தயாராக நின்றுகொண்டிருந்த 'கச்சேரி செட்' தங்களது தமுக்கு கொம்பு ஆகிய 'வாத்தியங்களை' முழக்கினர்.

பரமார்த்திகர், காதைப் பொத்திக்கொண்டு "கர்ணகடூரம்! ஐயோ, நிறுத்தச்சொல்லுங்கோ முதலியார்வாள்" என்றார். பாபம்! கோகில கானம், ராஜரத்னம் நாயனம், ஆகியவைகளையே கேட்டுப் பழகிய அவரால் எப்படி இந்த ஏழையுடகச்சேரியை' ரசிக்க முடியும்!

"டேய்! கழுதைகளா — நிறுத்துங்கடா, தூக்கிட்டுவந்துட்டான்க. தமுக்கையும் கொம்பையும். அப்பா! போதும், உங்க 'கச்சேரி' புறப்படுங்க — போங்க!" என்று சலிப்போடு இரைந்தார் முதலியார்.

கடலிரைச்சல் போல, தெருவையே அலறடித்த அவர்கள் 'கச்சேரி' சட்டென்று நின்றது. ஒருவர்பின் ஒருவராய் 'ஐயா'வை, கும்பிட்டார்கள்.

கல்யாண ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்த 'பந்து மித்திரர்கள்' —நான்கு பெண்கள், ஐந்து ஆட்கள், பத்து சிறுசுகள்—எல்லோரும் கிளம்பினர். பெண்ணின் தோழி, சீர்வரிசைகளான, ஒரு புதுப் பாய் இரண்டு மண் சட்டி, ஆகியவைகளைத் தூக்கிக்கொள்ள;பெண்ணின் தகப்பன், தன் மகளுக்கு திருமணப் பரிசாகக் கொண்டு வந்த 'கோழி' ஒன்றை தோளில்எடுத்துக்கொள்ள; முன்னே, மாப்பிள்ளையும் பெண்ணும் நடந்து செல்ல, அவர்கள் ஊர்வலம், அடுத்த தெரு நோக்கிப் புறப்பட்டது.

பண்ணையாள் பரமன் மட்டும் நின்றுகொண்டிருந்தான். கல்யாணம் முடிந்ததும், 'ஐயா' தருவதாகச் சொன்ன 'கலம்' நெல்லை வாங்கிப்போக வேண்டுமே என்ற கவலையோடு. அந்த நெல், கிடைத்தால்தான் மறுநாள் 'விருந்து' நடத்தி 'கொண்டான் கொடுத்தானு'க் கெல்லாம் மரியாதை செய்ய முடியும்! ஆகவே, அவன், வழக்கமான பயபக்தியோடு ஐயாவின் முகத்தைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தான்.

'ஐயா' கோபத்தோடு, பேசிக்கொண்டிருந்தார் 'ஏஜண்ட்' அய்யங்காரிடம்.

கோபம் ஏஜண்ட் மீதல்ல; ஆகவே, அவரும் முதலியாரோடு சேர்ந்துகொண்டு ‘தாளம்’ போட்டுக்கொண்டிருந்தார்.

“இதுகள் வார்த்தையை நீங்க எப்படி நம்பலாம் முதலியார்வாள்? தலையாரியைப் போய் பார்த்துட்டு வரச் சொன்னேன்னு சொல்றேள். தலையாரி மட்டும், யாருன்னு நினைச்சேள். அவனும் இவன் ரகம்தானே! நான், ஏன், இருக்கேன்?...இல்லே! ...நாம்பதான் ஏன் இருக்கோம். ‘பெண்ணைப் பார்க்கணும்—அழைச்சுட்டுவாடா!’ அப்படீன்னு,அழைச்சுட்டு வர்றாங்க—கழுதைக. அதை விட்டுட்டு, அவன்களை நம்பி, நூறு ரூபா கொடுத்தேள். இப்ப, என்னடான்னு, கோபிச்சுக்கிறேள்! நம்மைச் சுத்தி, ஏமாத்தவறன்க, இருக்கச்சே நாம்ப, அல்லோ, ஜாக்ரதையா இருக்கோணும்!” தமக்கே உரிய, பாணியில், பரமார்த்தீகர் பேசினார்.

அவர், சொல்வது, வாஸ்தவம்தான் என்று பட்டது முதலியாருக்கும். அவர், முனகலானார்; முன்போல் கோபிக்கவில்லை!

“என்ன, சார், பண்றது? எல்லாரும்உங்களைப்போல இருந்தா,நான், ஏன் இப்படியெல்லாம் ஏமாந்து போறேன். என்னமோ, ரொம்ப நாளா நம்மிடம் இருக்கிறவனாச்சே, நம்ப பண்ணையிலே ரொம்ப நாணயமா உழைக்கிறவனாச்சேன்னுதான், அந்தப் பய, பரமன் கேட்டதும் ‘சரி’ன்னு சொன்னேன்...”

“சொன்னேள். என்ன ஆச்சு? தும்பும் தோலுமாய் ஒருத்தியைப் பிடிச்சுட்டு வந்திருக்கான். ஓங்கி காற்றடிச்சா, பறந்துடுவாப் போலேருக்கு, பஞ்சாட்டம்! நாத்து நடதான், உடம்பிலே ஜீவன் இருக்கா—இல்லே, குனிஞ்சு நிமிர்ந்து களையெடுக்கவாவது தெம்பு இருக்கா—அதுகூட வேணும், கொட்டில் சாணி யெடுத்து குப்பையிலே கொண்டு போடச் சொல்வோமானாலும், அதுக்காவது அவள் லாயக்கா? பதுமை போல இருக்கா! உடம்பு வேறே கொஞ்சம் சிகப்பா இருக்கு! எங்கே, அந்தப் பய—பொன்னன்—இனிமே, உருப்படியா வேலை செய்யப் போறான். ஊம்... எனக்கு ஒண்ணும் நம்பிக்கை இல்லே!”

“ஏஜண்டு” சொல்வது அத்தனையும் சரியாகப்பட்டது முதலியாருக்கு. ஏனெனில் அவர் எதிர்பார்த்ததுபோல இல்லை, பூமாலை! இட்ட வேலையைச் செய்ய, எதைச் சொன்னாலும் செய்ய, நாத்து நடவும், களை யெடுக்கவும், ‘கட்டு கட்டவும்’—அவசியமானால் கட்டு தூக்கவுமான வகையில், வர்ட்ட சாட்டமான உருவத்துடன், வருபவள் வாய்ப்பாள் என்று எதிர்பார்த்தார். ஆனால் பூமாலையோ — பூங்கொடி போலிருந்தாள்! மாநிறம். சாதாரணமாக, விவசாயப் பெண்களுக்கிருக்கும் கட்டு மஸ்தான தேகம் இல்லை. கருப்பாகவுமில்லை. முகத்தில் ஒரு வித களை! எனவேதான், அவருக்கு ஆத்திரமும் ஆவேசமும் வந்தது, பரமன்மீது. ஏனெனில், பரமன்முதலியாரிடம் வந்து தன் மகன் பொன்னனுக்குக்கலியாணம்செய்யவேண்டுமென்று சொல்லி, அதற்காகப் பணம் கேட்டபோதே, பரமசிவ முதலியார் சொல்லியிருந்தார். “பார்க்கிற பெண்ணை நல்லவளாப் பாரு! நம்ப பண்ணைக் கேத்தவளாப் பாரு. நல்லா நாத்துநடுவாளா, இட்டவேலையைச் செய்வாளா, என்பதெல்லாம் பார்த்து முடிவு செய்” என்று. அவர் சொன்னபோது, “எனக்குத் தெரியாதுங்களா—பண்ணைக்கேத்தவளா, பார்த்து முடிச்சாதானுங்களே நல்லது!” என்றுதான் பரமனும் பதில் சொல்லியிருந்தான். அதேபோலத்தான் பெண்ணும் தேடினான்—பிடித்தான். கட்டினான். அவனுக்கும் மகனுக்கும், பூமாலை, வாய்த்ததில் எவ்வளவோ ஆனந்தம்! ஆனால் அவர்கள் ஆனந்தமும் முதலியார் ஆனந்தமும் ஒரே வகையாகவா இருக்க முடியும்? ஆகவேதான் சீறினார்: “ரூபாய் நூறு சார், நூறு! ஒழுங்கானவனாச்சே, நல்லவளா, நம்ப பண்ணைக்கேத்தவளா பார்த்து முடிப்பான்னுதான் நினைச்சேன். ஆனா, அவன் மேனாமினுக்கியைக் கொண்டாந்திருக்கிறான். என்ன பிரயோஜனம்?” என்று.

முதலியார், அய்யங்கார் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பரமனுக்கு, திகைப்பு அதிகமாயிற்று. ‘ஆண்டை, என்னென்னவோ சொல்றாரே!’ என்று விழித்தான். நெல் கேட்பதா—அல்லது நேராகச் சேரிக்குப் போவதா, என்று திண்டாடினான்.

ஒருபக்கம் ஐயாவின் ஆத்திரம்—இன்னொருபக்கம், கல்யாண விருந்து வைக்காவிட்டால் அவமானமாச்சே என்ற ‘மான—அவமான’ப் பிரச்னை. என்ன செய்வதென்று திகைத்து நின்ற, அவனை, ஏஜண்டின், குரல் எழுப்பியது.

‘ஏண்டா, நிக்கிறே...!

அந்த ஏழைக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை—வாய்குளறிற்று. தவறு செய்தவன் ‘பாவ மன்னிப்பு’ கோருவது போல, கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, ஐயா உட்கார்ந்திருந்த திண்ணையை நோக்கித் தெண்டனிட்டான்.

சோர்ந்த உள்ளங்கொண்ட ஏழை இதயம், என்னதெல்லாம் எண்ணிற்று அந்த வினாடியில்.

‘கூழைக்கும்பிடு போடறான்—திருட்டுப்பய...’ இந்த, அர்ச்சனையைத் துவக்கினார், ‘ஐயா.’

அவன் ‘இல்லீங்க’ என்று,பரிதாபத்தோடு பார்த்தான். மெதுவாக அவன் வாய் முணுமுணுத்தது ‘ஒரு கலம் நெல்’ என்று.

புயல் வீசிற்று. அக்னி எழும்பிற்று. பரமசிவம் பேசினார்—பண்ணைக்கார முதலியார் பேசினார், பரமனைப் பார்த்து!

‘ரூபாய் நூறு வாங்கினாயேடா நாயே’ என்று ஆரம்பமாகிய வார்த்தைகள்’ “மரியாதையா, நாளைக்கே உன் மகனைக் கொண்டுவந்து பணத்தை வைக்கச்சொல்லு. கணக்கைத் தீர்த்துடச் சொல்லு, அதோடே, உன் கணக்கையும் தீர்த்துட்டு ஓடறதும்னாலும் ஓடு! காலிப் பசங்க, என் பண்ணைக்குத் தேவையில்லை......” என்று முடிந்தன.

பரமன்—மரம்போல நின்றான். பரமசிவமுதலியார்—வெறி கொண்ட காளை போலச் சீறினார்! விரட்டினார் “போடா, போடா, என்முன்னாலே நிக்காதேடா!” என்று.

“ஐயா! பரம்பரை பரம்பரையா உங்க தாத்தா காலத்திலிருந்து இதே பண்ணையிலே தானே இருந்துவர்றோம். என் கல்யாணத்துக்குப் பணம் கொடுத்தீங்களே, எத்தனை ரூபாய் வாங்கினோம்? ரூபாய் 50-தானே. இருபது வருஷமா

10-ம் பக்கம் பார்க்க

சிந்தனைக்கு

பாட்டாளி — முதலாளி இந்த இரண்டிற்குமுள்ள பேத நிலையை, இப்போது மக்கள் அதிகமாக உணரத் தலைப்பட்டு விட்டனர்.

உழைப்போன் வாழவேண்டும், உழைக்காதவனின் சுகவாசம் நீடிப்பது நியாயமல்ல என்கிற எண்ணம் எல்லோரது இதயத்திலும் இப்போது ஒளிவிடத் துவங்கி விட்டது.

உழைப்போன் வாழ்வு உயர வேண்டும்—என்ற ஆசை இல்லாத அரசியல் கட்சிகள் இல்லை. அப்படி இருந்தாலும் அவைகள், தங்கள் எண்ணத்தை ஒளித்துமறைத்துக் கொண்டு, மேலுக்காவது 'உழைப்போர் வாழவேண்டும்' என்று கூறுபவர்களாகவே இருக்கிறார்கள். அப்படிக் கூறினால்தான், பலர் மத்தியில், பொதுமக்கள் தொண்டன் என்று உலவமுடியும் என்ற நிலை, இப்போது பிறந்திருக்கிறது.

ஏழை வாழவேண்டும் என்கிற ஆசையும், ஏழையின் முதுகில் ஏறி சவாரி செய்வது கூடாது என்ற முழக்கமும், எந்தெந்த கட்சிகள் முற்போக்கு விரும்புபவையாக இருக்கின்றனவோ அவையெல்லாம் விரும்புகின்றன. அந்தந்த கட்சிகளிலுள்ள வாலிப வீரர்களுடைய முழக்கமும் இத்தகையதாகவே இருக்கிறது.

"என்ன உலகமடா! ஏழைக்கே நரகமடா!" என்ற பாடல், 'ஏழைபடும் பாட்டின்' காட்சி, ஆகியவைகளில், மக்களின் மனம், முன்னைவிட இப்போது, அதிகமாகப் பதிந்து விட்டது.

இந்த நிலை —மகிழ்ச்சிக்குரியதுதான்.

பாட்டாளி வர்க்கத்துக்குப் பாடுபடும் பொதுவுடைமை இயக்கம், சமதர்மக் கட்சி ஆகியவைகளில் மட்டுமின்றி பிற்போக்குப் பீடமான காங்கிரஸ், இந்துமகாசபை போன்றவைகள்கூட தொழிலாளர் துயர் குறித்துப் பேசாமலில்லை.

முதலாளியிலிருந்து சராசரி மக்கள் வரை, இன்று சமுதாய அமைப்பிலுள்ள, பேதத்தைப் புரிந்து கொண்டு வருகிறார்கள்.

பலருக்கு வெளியில் சொல்ல துணிவு இல்லாவிடினும், சொல்வது கூடாது என்று கருதினாலும் அவர்கள் இதயத்தில் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுபற்றிய எண்ணம் இல்லாமலில்லை.

* * *

"ஏழை — பணக்காரன், ஆண்டவன் படைப்பு!"

"இதெல்லாம் முற்பிறப்பில் செய்தவினை. அவரவர் தலைவிதி!"

"பொன்னும் வெள்ளியும் ஒன்றாகமுடியுமோ? ஏழையும் பணக்காரனும் அப்படித்தான்."

இது போன்ற வார்த்தைகள், இப்போது கேலிக்குரியனவென்று கருதப்படுகின்றனவேயொழிய 'ஆமாம்' என்று சொல்வோர் தொகை குறைந்துகொண்டே வருகிறது.

இந்தப்புது நிலையை, எல்லோரும் உணர்கிறார்கள். மேட்டில் வாழ்வோன், ஆலை அரசன், ஆண்டை — அத்தனைபேரும், இதை நன்றாகத் தெரிந்துகொண்டனர். அதனால்

(8-ம் பக்கம் பார்க்க)

11-ம் பக்கத் தொடர்ச்சி

அது முடியுமா — அவமானமல்லவோ? இந்தக் கேள்விகள் ஒரு பக்கம்.

'நூறு ரூபாய்!' அவன் கண்முன் வந்து நிற்கும்.

"எப்படிக் கொடுப்பேன்?"

"கொடுத்தாலும், பிறகு வழி?"

"குடியிருப்பது, அவர் மனை தானே!"

"குடிசையையும் பிரித்து விடுவாரே!'.

அந்த ஏழையின் மனது நொறுங்கிற்று! தீ, அவனைச் சுட்டெரித்தது! திகைப்பு மேகம் அவனைப் போர்த்திற்று! கண்களிலே நீர்—அழுதான். அந்தி நேரம் முடிந்து இருட்டு நுழைந்துகொண்டிருந்தது. மங்கலான வெளிச்சத்தில், அவன் கால்கைபட்டு கதிர் விளைத்துத் தரும் கழனிகள் அவன் கண்ணிற் பட்டன. ஒருபோது—கதிர் தாங்கி அவை இருந்த காட்சியும்—இப்போது கோடை வெய்யிலால் வெடித்துக் கிடக்கும் கோரமும்! அவன், விம்மினான். தலையிலடித்துக் கொண்டான். திகைத்தான். எழுந்தான்.

"கணக்கு தீர்ந்தது!" என்று அவன் பேதை மனம், சொல்லிற்று. 'இதுவா என் முடிவு?' என்று அவன் ஏழை இதயம் எண்ணவில்லை, நடந்தான்.

மறுநாள் காலை, பண்ணையாரின் மாட்டுக் கொட்டகையில் 'ஒரு பிணம்' தொங்கிற்று!

1-ம் பக்கத் தொடர்ச்சி

பையே நம்பி வாழ்வது. ஆகவே, அதன் வாழ்வை வளமாக்க நாம் அனுதினமும் செய்துவரும் பணியின் மடங்கு வளரவேண்டும்.

பாட்டாளி உலகம் மிகப் பெரியது — சமுத்திரத்தைப் போல. ஆனால் அதன்மீது மிதந்து தங்கள் இன்ப உலகை அடையும் கப்பல்களாக இருக்கின்றனர், முதலாளிகளும்—அவர்தம் சர்க்காரும்.

அந்தச் சுயநலக் கப்பல்களை, பாடுபடுவோரின் சுதந்திர மூச்சு, புயலாக எழும்பி, சமுத்திரத்தில் கவிழ்க்க வேண்டும்.

அந்த நாளே, நமது தாயகம், உண்மை விடுதலை பெறும் நாள்.

அந் நாள் காண, நமது உடலை, உயிரை அர்ப்பணிப்போம். நமது கொள்கைகளை வாடாத மலராக்குவோம்! நம் இனம் வாழ, நமது சமுதாயம் நந்நிலைபெற, இளைஞர்களாகிய நாம், நம்மையே, தத்தம் செய்வோம்.

நமது தாயகம், தவிக்கிறது—தாயகத்தை வாழ்விக்கும் நமது இனம், பட்டினியால் சாகிறது. இந்த இழிநிலை ஒழிய, நாம், 'பலியானால் பரவாயில்லை. நமது இளமை வாழ்வு, சீர்குலைந்தால் கேடொன்றுமில்லை!

நாம், பணிபுரிவோம். நம் கடன் பணி செய்து கிடப்பதே!

இந்த நன்னாளில், நமது இதயங்கள் இந்தச் சபதத்தைத் தாங்கட்டும்!

"சமுதாயம் என்ற சங்கிலித்
தொடர்பில்
ஒரு மணியாக நீ சேர்.
அல்லது இலட்சியமற்ற
புழுதியாகச் சுழல்!"

திராவிட நாடு

ஞாயிறு] 6—5—51 [காஞ்சி

சொர்க்க வாசல்

★

சொர்க்கம் போக டிக்கட் தருகிறார்கள் — அதுவும் ஐந்தேகாலணுவேதான்!

இந்த டிக்கட்டை வாங்குவதற்காக மக்கள் 'க்யூ' வரிசையில் நிற்கின்றனர்.

சௌராஷ்டிராவில் போர் பந்தரிலுள்ள சுதாமா கோயிலில் ஏராளமான மக்கள் சொர்க்கம் போகத் துடியாய்த் துடித்தபடி நிற்கின்றனர்.

சொர்க்கத்தை சுலபத்தில் காட்டிவிட்டார்கள் — சொர்க்கத்திற்குப் போக மக்கள் தங்கள் அவசரம் முழுவதும் காட்டி அங்கே கூடிவிட்டார்கள்.

சொர்க்கத்திற்கு பாதையென்ன —போவதெப்படி என்று கேட்டுவிடாதீர்கள்.

சொர்க்கம் வேறெங்குமில்லை. சுதாமா கோயில் விக்கிரகத்தின் முன்னுலிருக்கும் பலிபீடத்தைத் தாண்டிவிட்டால் சொர்க்கந்தான்—தாண்டும்வரை நரகமே! பலி பீடத்தைக்கடந்து சென்றவர்களின் பாவங்கள் போய், புனிதர்களாகி விடுவார்களாம்.

முதலில் சொர்க்கம்போக டிக்கட்டில்லை. இப்பொழுதுஐந்தேகாலணு.

சொர்க்கம் சென்றவருக்கு புரோகிதர் திலகமிடுகிறார்.

சொர்க்கத்தை, ஐந்தே காலணு தூரத்தில் கொண்டு வந்துவிட்டார்கள்.

சொர்க்கலோகம், எல்லோரும் போக நினைக்கும் பூமிதான்-ஆனால், மௌடீகத்தின் பிடிப்பால் மக்கள் இப்படி சுதாமா கோயிலில் சுற்றி வருகிறார்கள்.

சொர்க்கம் எங்கே இருக்கிறது? சுதாமா கோயிலிலா, இல்லை,இல்லை! நம்மைச் சுற்றிலும் நடமாடும் சொர்க்க லோகம் உண்டு.

நாமிருக்கும் இடத்தை சொர்க்கமாக மாற்றும் மனத்துணிவு வேண்டும்.

மக்களுக்கு சொர்க்கம், பசியில்லாத நிலைமை — பட்டினி கிடக்க வேண்டாத அளவு உணவு — இதனைத் தந்துவிட்டால் சொர்க்கம் என்றுதான் பேசுவர்.

அந்த சொர்க்கவாசலின் கதவுகளைத்தான் தட்டியபடியே மக்கள் இருக்கின்றனர்.

சொர்க்கவாசலைத் திறக்கவேண்டியவர்களோ, இன்னமும் வழி தெரியாமல் தவிக்கிறார்கள்.

சொர்க்கத்தை, நரகமாக்கியபடி இருந்தனர்!

உணவு நெருக்கடி ஏற்பட்ட பொழுது, சுயதேவை பூர்த்தியென்று, எந்த இராகத்திற்கும் ஒத்துவராத பாடலை, பாடியபடி இருந்தனர்.

நாம், சொர்க்கபூமி, இப்பொழுது சோர்வுபூமியாகிறது என்று எடுத்துக்காட்டினோம் — எச்சரித்தோம் —கண்டித்தோம்—ஆனால் ஏளனப் படுத்தப்பட்டோம்!

சொர்க்கம், ஏதோ ஐந்தே காலணுவில் கிடைத்துவிடும் என்று சுதாமாகோயிலில் கூடிக்கிடப்போர் நினைக்கின்றனர். அதுபோல, நம்மையாளும் காங்கிரசாட்சியினரும், வீரவுரையும் வித விதமான காகித தீர்மானங்களும் போதுமென்றே தீர்மானித்தனர்.

சொர்க்கம் நரகமாயிற்று—சோற்றுக்கில்லையே என்று சோர்ந்து படுப்போர் தொகை வளரலாயிற்று!

வெகு தொலைவிலுள்ள நாடுகளிலிருந்தெல்லாம் உணவு தான்யங்களைப் பெற மிகவும் பிரயாசைப்பட்டிருக்கிறோம்.

கப்பலுக்குப் பின் கப்பலாக உணவு தான்யங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இருந்தாலும் இவை போதாது.

அவசியமிருந்தால், இனியும்வெளி நாட்டு உதவியை நாடியபடி இருப்போம்.

சொர்க்கலோக காவலாளி, கதவு திறக்க மார்க்கம் காட்டுகிறார் இப்பொழுது — முன்னர் நாம் கூறிய பொழுது ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல, நம்மையெல்லாம் குறை கூறினர்.

பிரதமர் நேரு, தமது ரேடியோ பிரசங்கத்தில் வெளிநாட்டு உணவு உதவி அவசியமென்பதை உணர்ந்து பேசியுள்ளார் சுயதேவை பூர்த்தியென்று கூறியதோடு நிறுத்திக்கொள்ளவில்லை.

உண்மையை உணர்ந்த காரணத்தால்தான் நிலைமை சீர்பட,—நரகம், சொர்க்கமாக—வழி தெரிகிறது!

டாமல் செஞ்சீனுவில் — கனம் முன்ஷி பர்மாவில்! உணவுநெருக்கடி தீர்க்க தூதுபோயுள்ளனர். அமெரிக்காவிலும் இதுபற்றியே பேச்சு வார்த்தை!

பர்மிய சர்க்காருடன் ஒப்பந்தம் பேசி, உணவுப்பொருள் பெற, கனம் சென்றுள்ளார். அதுபோலவேதான் சீனுவுடனும் இந்திய சர்க்கார், முன் அனுப்பியதைவிட இன்னும் அதிகம்பெற பேச்சு வார்த்தை நடத்துகின்றனர்.

இதனைத்தான் நாம் நெருக்கடியைத் தீர்க்கும் நேரான வழி, சீரான முறையென்றோம். இப்பொழுதாவது புரிந்துகொண்டு பணியாற்றுகிறார்களே. என்று நாம் மகிழ்கிறோம்.

சொர்க்கம் சுதாமாகோயிலல்ல இந்த பரந்த தேசத்தில் —பலிபீடத்தைத் தாண்டுவதால் வந்துவிடாது உணவு நெருக்கடியைத் தாண்ட வேண்டும். பாவங்கள் போகிறதோ இல்லையோ, பட்டினி போகவேண்டும், பஞ்சம் போகவேண்டும் அங்குதான் சொர்க்கத்தைக் காண முடியும்.

இந்திய சர்க்கார், இதனை உணர்ந்து பணியாற்ற வேண்டும்.

* * *

சொர்க்கத்திற்கு வழி காட்டும் ஏழுமலையான் கோயிலிலே திருட்டு —சில லட்டுகள், கொஞ்சம் ரூபாய்!

போலீஸ் புலன் விசாரணை செய்கிறது!

திருட்டு போன லட்டு, மிகப் பிரசித்தமானவை — ஆகவேதான் போலீஸ் பாதுகாப்பு — இரண்டு ஹெட் கான்ஸ்டேபிள், எட்டு கான்ஸ்டேபிள்கள் காவலிருப்பார்கள்.

சொர்க்கம் எவ்வளவு தூர்பாக்கிய நிலையிலிருக்கிறது என்று பாருங்கள்.

அகில உலக நாதர் ஏழுமலையானுக்குப் போலீஸ் காவல்! எவ்வளவு வெட்கங் கெட்ட நிலை.

திருப்பதி வெங்கடாசலபதி லட்டைப் பறிகொடுத்து விட்டு, போலீஸ், 'லட்டியை' நம்பி, காவலிருக்க வேண்டியுள்ளார்.

தேவாதிதேவர், சாதாரண மனித உதவியை நாடுகிறார்.

பண்டிதநேரு, பாராளும் மந்திரி—நினைத்தால் எதையும் செய்யலாம். செய்வதாகவும் கூறுகிறார். ஆனாலும், மக்களைப் பார்த்துக் கூறுகிறார், ஒருநாள் விரதமிருங்கள் என்று!—இது, வெங்கடாசலபதி, போலீஸ் உதவியைத் தேடுவதைப் போலத்தானே!

மக்கள் விரதமிருந்து, உணவு தருவதென்றால், அதற்கு ஏன் மந்திரி சபை, மற்ற மற்ற ஆட்சி ஏற்பாடுகள்!

கொசுவைக் கொல்ல, ஒரு குறும்பன் வழி சொல்லித் தந்தான். கொசுவை மெதுவாகப் பிடிக்க வேண்டுமாம். பிறகு அதற்குச் சிரிப்பு காட்டவேண்டுமாம், அது சிரிக்கும்பொழுது, அதன் வாயில், அவன் தரும் விஷப்பொடியைத் தூவிவிட வேண்டுமாம். பிறகு கொசு இறந்துவிடுமாம். அப்படியல்லவா, பண்டிதநேரு பேசியுள்ளார்.

உணவு நெருக்கடி தீர, அதிக உணவு உற்பத்தி செய்யவேண்டும், அயல் நாட்டு உணவுப் பொருள்களை வரவழைக்க வேண்டும் என்றால் ஒப்புக்கொள்ளலாம். மக்கள் விரதமிருந்து உணவை மீத்தல் என்றால், அது கொசுவைக் கொல்ல, 'கோணல்' வழியைக் கடைப் பிடிப்பது போலத்தான்!

தினமும், மக்கள் வயிறார உண்ணத்தான் திட்டம் தீட்டவேண்டுமே தவிர, ஒருநாள் விரதம், இரண்டு நாள் பட்டினி, மூன்று நாள் உபவாசம், ஒருநாள் உண்ணு விரதம் என்றிருக்க அல்ல!

பண்டிதநேரு, சீனாவுக்குத் தூது அனுப்பினார்—பர்மாவுக்கு முன்ஷி சென்றுள்ளார். அமெரிக்கா உதவியைக் கேட்டுள்ளார். கானடா, உணவு தருமா என்று எதிர்பார்க்கிறார். இவை, உண்மையில் ஏற்ற திட்டங்கள். வெங்கடாசலபதி, திருடியவனைத் தாமே, தண்டனை தர, நரகத்திற்கு அனுப்புவதுபோல! ஆனால், அவர் போலீஸ் உதவியை நாடுவதுபோல், நேரு, பொதுமக்களை விரதமிருங்கள் என்று கூறுவது பொருந்தாது.

அனைவரும் வாரீர்!

தோழர் இரா. நெடுஞ்செழியன்

—மன்றம் அச்சக நிதி—

கோவை

எடிசன் தியேட்டர்

13—5—51 ஞாயிறு இரவு 9½-க்கு

நீதிதேவன் மயக்கம்

(காவிய ஓவியம்)

"இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்" —கம்பர்.

"எது இரக்கமில்லை — நீதிதேவா, நீர் கூறும்." —இராவணன்.

கம்பர் திண்டாடுகிறார்! நீதிதேவன் கலங்குகிறார்! இராவணன் சங்கநாதம் செய்கிறான்!

கருத்துக்கு விருந்து!

இலட்சிய பேரிகை!!

பொதுச்செயலாளர் சி. என். ஏ.

இராவணனாக, வருகிறார்.

பல கழக முன்னணி வீரர்கள் பங்கு கொள்ளுகின்றனர்.

வருக! வருக!!

நற்சுவை பருக வருக!!!

கட்டணம் ரூ. 10, 5, 3, 2.

பெண்கள் ரூ. 1

வெளியூர் கழகங்களின ஒத்துழைப்பை பெரிதும் விரும்புகிறோம். கழகப் பிரமுகர்களின் உதவியையும் நாடுகிறோம்.

'மன்றம் அச்சக' நிதிக் குழு

நகர தி. மு. க. கோவை.

சொர்க்கம், விரதத்தால் கிடைப்பதல்ல! வயிறார உண்ண வசதியுள்ள இடந்தான் இன்றைய சொர்க்கமாகும். அதன் வாசலில்தான் மக்கள் குழுமிக் கிடக்கின்றனர்.

சொர்க்கவாசலை திறக்கவேண்டியவர்கள் காங்கிரசாட்சியாளர்—திறக்க முயற்சிக்க வேண்டும் விரைவில், அதற்கு அதிக நெஞ்சுரம் மட்டுமல்ல, மூளை பலமும் வேண்டும்.

சொர்க்க வாசல் திறக்கட்டும்—சோற்றுக்கில்லாமை ஒழியட்டும்!

ஓய்வு தேவை

திராவிடர் கழகத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் வரை, சென்னை மாவட்ட செயலாளனாக இதுவரை இருந்து, திராவிட பெருங்குடி மக்களுக்கு எனது சிறிய தொண்டினை செய்ய, அன்பு கனிந்த ஒத்துழைப்பு தந்துதவிய எனது அருமை நண்பர்களுக்கு என் உளம் தோய்ந்து கனிந்த நன்றியைத்தான் இந்நேரத்தில் என்னால் செலுத்த முடிகின்றது.

எனது உடல் நலம் சென்ற இரு திங்களாக குன்றி விட்டது. டாக்டர் என் உடலை பரிசோதித்து நான் ஓராண்டுக்கு ஓய்வு எடுத்துக் கொண்டே ஆகவேண்டுமென்று எச்சரித்ததோடு, சித்தூர் மாவட்டத்திலுள்ள ஓர் மருத்துவ மனையில் உடனே சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் யோசனை கூறியுள்ளார். ஆகவே கழக நிர்வாகங்களில் நான் கலந்து கொள்வதற்கில்லை, என்பதோடு, சென்னை மாவட்ட தி. மு. கழக, செயலாளர் பதவியினின்றும் நான் விலகிக் கொள்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது இந்த முடிவை ஏற்றுக்கொள்ளுமாறு எனது சகா தோழர்களாகிய, சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் குழுவினர்க்கும் தெரிவித்துள்ளேன்,

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக்குழு உடனடியாகக் கூடி எனக்குப் பதிலாக புதிதாக ஒரு செயலாளரை தேர்ந்தெடுத்தவுடன், அவரிடம் என் வசமுள்ள கழக சொத்துக்களையும், சம்பந்தப்பட்ட இதர இனங்களையும் ஒப்புவிக்கத் தயாராக இருக்கின்றேன் என்பதை சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பர்களுக்கு எனது வணக்கம்.

கே. கோவிந்தசாமி செயலாளர்

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

சென்னை.

5-ம் பக்கத் தொடர்ச்சி

தான் இன்று ஏழைக்குப் பரிந்து பேசுவதே பொதுப்பணி என்று கருதுமளவுக்கு நிலைமை வளர்ந்திருக்கிறது.

வளர்ந்துள்ள நிலை, வர்க்கப் போராட்டம் ஒருமுடிவுபெறவேண்டும்—எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று கருதுவோருக்கு மகிழ்ச்சியைத்தான் தரும்.

ஆனால், அந்த மகிழ்ச்சியிலேயே அமிழ்ந்திசமுதாய அமைப்புஇன்று எப்படி இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

ஏழை—பணக்காரன் பேதம்நீடிப்பதற்குக் காரணமே இன்றுள்ள சமுதாய அமைப்பின் அடிப்படைக் கோள்கைதான்.

தற்போதுள்ள சமுக அமைப்பு, முதலாளித்துவ முறையை அடிப்படையாகக் கொண்டது. மனித சமுகம் வாழவேண்டும் என்கிற பரந்த மனப்பாவம் இல்லை. தனிப்பட்டவர்களின் நல்வாழ்வும், ஒரு சிலரின் சுகபோகமும், அதற்கான சட்டதிட்டங்களுமே, இன்று இருக்கின்றன.

இந்நிலை இருப்பதால்தான், தனி மனித சுதந்திரம் (Individalism) அதிகமாகவற்புறுத்தப்படுகிறது.

"ஜெமீன் ஒழிப்பா? அதுகூடாது. எப்படி என் ஜீவாதார உரிமையில் தலையிடலாம்"

"இனம் ஒழிப்பா? ஐயோ! அது இந்துமதச்சட்டப்படி ஏற்பட்டதாயிற்றே. அது எங்களது பரம்பரை பாத்யதை ஆயிற்றே!"

"நாங்கள் வாழ்ந்தால் என்ன. தகுதியும் திறமையும் இருப்பதால் சுகபோகம் அனுபவிக்கிறோம். அதைத்தடுப்பது எங்களது அடிப்படை உரிமையில் கைவைப்பது!"

"மில்களை மூடவேண்டுமா? சர்க்கார் உத்திரவு போடுகிறது. என் இஷ்டப்படி, என்கீழ் வேலை செய்பவர்களை நடத்துவேன். இதைக் கேட்க சர்க்கார் யார்? என் தனி உரிமையில் தலையிடலாமோ — பார்க்கிறேன், சுப்ரீம் கோர்ட்டில், ஒரு கை!"

இதுபோன்ற, பல சம்பவங்களை, இன்று நம் கண்முன் காண்கிறோம்.

இது, தனி மனித சுதந்திரம் என்ற பெயரால் முதலாளித்துவத்துக்கேற்பட்ட சலுகையின் விளைவுகளாகும்.

*   *   *

சமுதாயம், என்பது—பல்கோடி மக்கள் வாழும் கூட்டு அமைப்பாகும்.

அந்தக் கூட்டு அமைப்பால்தான் நாடும் சர்க்காரும் வாழ்கிறது.

சர்க்கார் இருப்பதும், ஏற்பட்டதும், சமுதாயத்தை நன்னிலைப்படுத்தி, சமுதாயம் இன்னல் இல்லாது கண்காணிக்கத்தான்.

சமுதாயத்துக்காகத்தான் சர்க்காரேயொழிய; சர்க்காருக்காக அல்ல சமுதாயம்.

ஆனால், இன்று இந்த தத்துவம் மாறிவிட்டது. ஆதிக்கம் கொண்ட சிறுபான்மையினரின் பொருளாதார, சமுதாய, ஆத்மீக அலுவல்களைக் கண்காணிப்பதே, சர்க்கார்; அவைகளைக் காப்பாற்றுவதே, சர்க்காரின் கடமை என்ற நிலை இருந்து வருகிறது.

அதனால்தான், தனியொருவனின் சொத்துக்குப் பாதுகாப்புத் தரவும், தனிப்பட்டவனின் ஜாதியாசாரம் சீர்குலையாமல் காக்கவும், தனிப்பட்ட ஒருவனின் மத உணர்ச்சி பங்கப்படாமல் கண்காணிக்கவுமான பொறுப்பே தன்னுடையதென, இப்போதுள்ள சர்க்கார், கருதுவதும் அப்படியே ஆள்வதுமான நிலை இருந்துகொண்டு வருகிறது.

தனிப்பட்ட மனிதர்கள் சிலருக்காக ஏற்பட்ட சட்ட திட்டங்கள் நீடிப்பதனாலேயே, அந்த சட்ட திட்டங்களால் பாதிக்கப்படும் பெரும்பான்மையோர்உறுமுவதும், குமுறுவதும்.

*   *   *

சமுதாயம் நன்னிலை பெற்று, எல்லோரும் மனிதர்களாக வாழவேண்டுமேயானால், தனிப்பட்டோருடைய சுகவாழ்வு முறைகள் மாற்றப்பட வேண்டும்.

குரல் உயர்ந்தோர், பணம் படைத்தோர் ஆகியவர்களைக் காப்பாற்றுவதே சர்க்கார்—என்ற நிலை மாறவேண்டும்.

அப்போதுதான் பேதமற்ற சமுதாயம் உருவாகும்.

முதலாளி — தொழிலாளி பிரிவு நீங்கும்.

உழைப்போனும், உழைக்காதவனும் ஒரு நிலை பெறுவான்.

இந்த அடிப்படையை, எல்லோரும் உணரவேண்டும்.

குறிப்பாக, பிற்போக்கு கட்சிகள் கூறும் வார்த்தைகளில் மயங்கும் வாலிபர்கள் இதை நன்கு சிந்திக்க வேண்டும்—நாடு வாழ, சமுதாயம் வளர.

ஏழையின் கண்ணீர்!

★

சிங்காரச் சென்னையிலே கடந்த இருபது நாட்களாகக் கண்றாவிக் காட்சியொன்றைக் காண்கிறோம். வேதனை பிம்பங்களாம், நெசவாளர்கள் பலர் சர்க்கார் காரியாலயம் நோக்கி ஊர்வலமாக வருவதும், அவர்களை வழியிலேயே மடக்கி போலீசார் கைது செய்வதும், பிறகு விடுவிப்பதுமான வேதனை நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சர்க்கார் காரியாலயத்தின் முன் மறியல் செய்வது, பிச்சையெடுக்கும் முறையில் தங்கள் குறைகளை மக்களுக்கும் சர்க்காருக்கும் தெரிவிப்பது என்பதாகத் திட்டமிட்டு நெசவாளர்கள் சார்பில் இந்த அறப்போர், கடந்த இருபது நாட்களாக நடைபெற்றுவருகிறது.

இந்த சாத்வீக அறப்போர் துவக்கவேண்டி ஏற்பட்ட காரணத்தை விளக்கி சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் நடவடிக்கை கமிட்டி செயலாளரான தோழர் பிரகடகோட்டையா விடுத்துள்ள அறிக்கையொன்றில், ஏன் இந்நிலை ஏற்பட்டது என்பதை விபரமாக விளக்கியுள்ளார்.

வேதனை தாங்காததால், இந்த முடிவுக்கு வந்தனர்—நெசவாளர்கள்.

ஆனால், வேதனை நீக்கவேண்டிய சர்க்காரோ அவர்களைப் பிடிப்பதும் அடைப்பதும் பின்னர் விடுவிப்பதாகவும் வேடிக்கை செய்துகொண்டிருக்கிறது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நான் தங்கியிருந்தபோது, கம்யூனிஸ்டு சோஷியலிஸ்டு தோழர்கள் பலர் உரையாடினர்—எல்லாம் அடுத்த தேர்தலைப் பற்றி.

நெல்லைமாவட்டத்திலே சோஷியலிஸ்டு இயக்கத்துக்காகப் பணிபுரியும் தோழர் பொன்னம்பலம், முக்கூடல் கூட்டத்தை முடித்துக்கொண்டு இரவு மூன்று மணிக்கு நாங்கள் நெல்லை வந்தபோது, விடுதியில் சந்தித்து நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார்— சோஷியலிஸ்டு கட்சியின் நிலைபற்றியும், திராவிட இயக்கத்தின் போக்கினைக் குறித்தும்.

பொதுவாகவே, எல்லாக் கட்சியினருக்கும், அடுத்ததேர்தலைப்பற்றிய சிந்தனை அதிகம் இருப்பதால், வேகமாக வளர்ச்சி அடைந்துள்ள தி.மு. கழகத்தின் கூட்டுறவும் ஒத்துழைப்பும் தத்தமக்குப் பலன் தரும் என்ற பலமான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. பொதுக்கூட்டங்களிலும், தனி உரையாடல்களின்போதும், தேர்தலைப்பற்றி நமது கழகம் கொண்டுள்ள போக்கை நான் தெளிவுபடுத்தினேன். பலருக்கு வருத்தம்! காங்கிரசாட்சியிலே மற்றுமோர் முறை நாடு சிக்கினால், நாஜீசம் போன்ற நாசநோய் நாட்டைப் பிடித்துக்கொள்ளும் என்று உண்மையாகவே பொதுமக்களிடம் பழகிப் பணியாற்றுபவர் அனைவருமே அச்சமடைந்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சிபோல ஒரு கட்சி இவ்வளவு வலிவும் செல்வாக்கும் பெற்றதுமில்லை, இவ்வளவு விரைவாக வீழ்ச்சியுற்ற கட்சியும் காங்கிரசைப் போல வேறுகாணமுடியாது என்று சாமான்யர்களெல்லாம் கூறுகிறார்கள். அந்த அளவுக்கு மனக்கசப்பு கிராமப் பகுதிகளிலே நிரம்ப இருக்கிறது, காங்கிரசாட்சி ஏற்பட்ட இந்த நாலு வருடத்திலே, ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள காட்டுராஜாக்கள், கள்ளமார்க்கட்காரர்கள், கபடவேட்டதாரிகள், முதலாளிகள், கதர்ச்சட்டையினர் ஆகிவிட்டிருக்கின்றனர். இந்தக் காட்சி ஒன்றே போதுமானதாக இருக்கிறது, மக்களின் கண்களைத் திறந்திட! யாரார் அக்ரமக்காரர்களோ, அமுல் செய்வதன்மூலம் வாழ்வை வளமாக்கிக்கொள்பவர்களோ, அவர்களெல்லாம், 'அங்கு'—அதாவது காங்கிரசில்! எனவேதான், காங்கிரசை வீழ்த்தியாக வேண்டும் என்ற எண்ணம் பொதுமக்களிடம்பலமாக ஏற்பட்டுவிட்டது. தங்கள் வீட்டிலேயே, அலங்காரமாக அமைக்கப்பட்ட 'தூண்' செல் பிடித்து விட்டால், தூணின் அழகு, வேலைப்பாடு, அதை அமைக்கும்போது எடுத்துக்கொண்ட சிரமம், இவைகளை எண்ணிக்கொண்டா சும்மா இருக்கிறார்கள்—செல் அரித்த தூண் இருப்பது கட்டடத்துக்கே ஆபத்து என்பதைஅறிந்து 'தூணை' அகற்றிவிடத்தானே செய்கிறார்கள். அதுபோலத்தான், காங்கிரஸ்விஷயமாகவும். ஏகாதிபத்ய தாசர்களின் இருப்பிடமாக இருந்த ஜஸ்டிஸ் கட்சியையே, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில வாலிபர்கள் முனைந்து பணியாற்றி மக்கள்இயக்கமாக்கி விட்டனரே, குமரனின் இரத்தத்தால் வளர்ந்த காங்கிரசை இன்று ஏழையின் இரத்தத்தைக் குடிக்கும் கொடியவர்களின் கொலுமண்டபமாக்கி விட்டனரே, இதென்ன கோரம்—என்று கருத்துள்ளோர் பேசிக் கொள்கின்றனர்.

நெல்லை மாவட்டத்தின் நிலையைக் கண்ட நான், அந்த மாவட்டத்திலே மேலும் பல சிற்றூர்களிலேயும் சென்று திராவிட இயக்கப் பிரசாரம் செய்ய, நமது இயக்கத் தோழர்களை அனுப்பி வைப்பதாகவும் வாக்களித்திருக்கிறேன். முழுநேரம் தொண்டாற்றக்கூடிய தோழர்கள் நிரம்பத் தேவைப்படுகிறார்கள். வேலை மிகுதியாக இருக்கிறது—புதிது புதிதாகப் பாசறைகள் அமைவதற்கான சூழ்நிலை உருவாகியவண்ணம் இருக்கிறது. பணிபுரிவோரின் தொகை வளர்ந்தாக வேண்டும்—இயக்க இயந்திரம் பெரிதாகிவிட்டது— அலுவலர்களின் அளவு போதவில்லை.

கோவை வாரீர்!

"இதுவல்லவா தமிழ்! கேளப்பா கேள், உருண்டோடிவந்து எதிரிகளின் வாதங்களைத் தூளாக்கும் அந்த வார்த்தைகளின்வரிசை வனப்பையும், வளத்தையும் கவனி! தென்றல் வீசுகிறது இப்போது! இதோ, புயல்! இதோ கேட்டாயா, பழந்தமிழ்ப்பாடல் — ஓசைநயத்தைமட்டுமா காண்கிறோம், உள்ளத்தைப் பண்படுத்தும் பொருட்செறிவும் தானே இருந்திடக் காண்கிறோம்! தமிழ் கற்றதனாலாய பயன் என்கொல், இவ்வண்ணம் நற்றமிழ்பேசிடாதிருப்பின்!— பேச்சுடன், நடிப்பும் கலந்திருக்கிறது! அதோ பாரீர், முகத்திலே தவழும் கனிவு! கண்களிலே ஒளி காணீர்—தமிழ் வீரத்தின் சான்றுபோல! இதோ அழகிரியின் தோற்றம்! — இந்த இளைஞர், எவ்வளவு எழிலுறத் தமிழைப் பயன்படுத்துகிறார்!"

தமிழகம் பத்தாண்டுகளாக இது போல அன்புரைகூறி வாழ்த்தி வருகிறது, திராவிட இயக்க முன்னணி வீரர் ஒருவரை!

அந்தக்காலை, காடுமேடு, என்று பாராமல், உல்லாசமேடுகளைத்தேடி ஓய்வு நாடாமல், திராவிட இயக்கப் பணி புரிந்து வருவதைத் தமிழகம் நன்கு அறியும்.

பட்டப்படிப்பு எனும் முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதால் வேலை தேடிக்கொண்டு பக்குவமாக வாழ்வை நடத்திச் செல்லக்கூடிய வாய்ப்பு நிரம்ப உண்டு—எனினும் வாய்ப்புகள் தாமாக வந்தபோதும், வாழ்க திராவிடம்! வளர்க தமிழ்!— என்று முழக்கமிட்டபடி தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலேயும் திராவிட இயக்கப் பிரசாரம் புரியும் பணிக்கே தன்னை அர்ப்பணித்து விட்டார் அந்த இளைஞர்.

தமிழகம் அவரைப் பாராட்டுகிறது—தமிழகத்திலே அவருடைய பணி தங்கு தடையின்றி நடைபெற்று வருகிறது.

அவர் மன்றமேறித் தமிழருக்கு அழகுத்தமிழில் அரிய கருத்துகளைக் கூறி வருவது போலவே, தமது நுண்ணறிவைத் திரட்டி எழுதி, தமிழருக்குப் பயன்தர 'மன்றம்' எனும் ஏடு துவக்கினார் — நாடு மகிழ்ந்தது — எனினும் அச்சகம் இல்லாக் குறையால் 'மன்றம்' நிறுத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் 'மன்றம்' தோன்றி, துவளாமல் வாழ வேண்டுமானால், அதற்கென ஓர் அச்சகம், நிச்சயமாகத் தேவை.

'அச்சகம்' அமைத்துத் தர.

வேண்டியது, நன்றி மறவாத் திராவிடரின் கடமை.

என் 'பங்கு' செலுத்த, நானும் என் நண்பர்கள் சிலரும், மே 13-ம் நாள், கோவையில், நாடகம் நடத்தித் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

காவிய நடை யழகுடன் பேசியும் எழுதியும் வரும் நண்பர் நெடுஞ்செழியன் (இதுவரை, பெயர் குறிப்பிடவில்லை எனினும் அவரைத்தான் குறிப்பிடுகிறேன் என்பதை அறிந்திருக்கிறீர்கள்) அவர்களின் 'மன்றம்' ஒரு அச்சகம் பெற, நான் நடத்தவேண்டிய நாடகமும், காவியக் கருத்தைக் கொண்டதாகவே இருத்தல் வேண்டும் என்பதால் போலும், நீதிதேவன் மயக்கம் எனும் நாடகம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நாடக மூலம் கிடைக்கும் பணம், ஒரு அச்சகம் நல்லவிதமாக அமைவதற்கு ஏற்ற அளவு இருக்க வேண்டும். நாடகம் முடிந்து கணக்குப் பார்க்கும்போது, அச்சகத்துக்குப் போதுமான 'தொகை' கிடைக்கவில்லை என்ற 'கவலை' எழக்கூடாது. அடிக்கடி இவ்வித முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கவும் இயலாது—எனவே, நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள், திராவிடத் தோழர்கள் நன்றி மறவா நல்லவர்கள் என்று உணரும் வண்ணம், நன்கொடை, டிக்கட்டுகள் மூலம், அச்சகம் அமைவதற்கான பண உதவி கிடைக்கச் செய்யக் கோருகிறேன்.

'நீதிதேவன் மயக்கம்' நாடகம் ஒரு நல்ல காரியத்துக்காக எடுத்துக் கொள்ளப்படும் சிரிய முயற்சி— இதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பையும் கோருகிறேன். என் கோரிக்கையை நீங்கள் இதுவரையிலும் வீணாக்கினதில்லை— இம்முறையும் என் நம்பிக்கை தளரவில்லை. வாரீர், கோவைக்கு! வளமார் திராவிடத்தின் விடுதலை வீரனும் நெடுஞ்செழியன் அவர்களுக்கு அன்புரை வழங்க!

4-ம் பக்க தொடர்ச்சி

உழைக்கலீங்களா? இன்னும், கை கால் கீழே விழுற வரைக்கும் உடம்பைத் தேய்க்கத்தானே போறோம். இதைத் எண்ணிப் பாருங்க! ஏழை வயற்றிலே அடிக்காதிங்க. ஒரே மகன் — அதுவும் ஆசை மகன். அஞ்சுவயசானபோது உங்க பண்ணையிலே விட்டேன். மாடுமேய்ச்சான் —மந்தை ஓட்டினான். பெரியவனான்—என்னைப் போல அவனும் உழைக்கிறான் இப்போது. அவனுக்குக் கல்யாணம் கட்டத்தான் பணம் வாங்கினேன். நூறு ரூபா தந்திங்க! நிஜம்தான். ரூபா நூறு எண்ணித்தான் தந்தீங்க...ஆனா, சும்மாவா கொடுத்திங்க? எழுதிவாங்கிகிட்டு, என் மகனும் மருமகளும் இருக்கிறவரைக்கும் உழைக்கணும்னு சொல்லீட்டுத்தானே, கொடுத்தீங்க! இனி, அவனும்அவன் பெண்ஜாதியும் சாகிற வரைக்கும் உங்கஅடிமை தானுங்களே. உதைச்சாலும், அடிச்சாலும், அதட்டினாலும், தட்டினாலும், அவன் 'ஐயோ'ன்னு அலறினாலும் நீங்க 'அடா'ன்னு அழைத்தாலும் இனி அவன் உங்க எடுபிடி தானுங்களே! இதை நினைச்சிப் பாருங்க. உங்ககிட்டே வாங்கின பணத்தை நான் இல்லேன்னு சொல்லலே. என் மகனும், உங்க பண்ணைக்கு உழைக்க முடியாதுன்னு சொல்லலே. நாங்க உழைக்கிறோம் — எப்போதும் உழைப்போம். கருணை செய்யுங்க! ஒரே மகன். அவனுக்கப்புறம் யாருக்குங்க, நான் கலியாணம் செய்யப் போறேன். பூமாலை—அவன் அத்தை மக. அவள் மீது அவனுக்குக் கொள்ளை ஆசை. அவளுக்கும் அப்படித்தான். சின்னஞ் சிறுசுகள்! அறியாத வயது. அழகா, மனங் குளிர, கண்ணாலே பார்க்கிறது தானுங்களே மாதாபிதாவுக்குள்ள ஆசை. ஐயா! இதை, நினைச்சுப் பாருங்க. பூமாலை ஏழைதான். என்னைப் போல, இன்னொரு பண்ணையிலே வேலை பார்க்கிறவன், மகதான். அவள் ஒல்லியாயிருப்பது அவ தப்புங்களா? மாநிறமாக இருப்பது பெத்தவங்க தவறுங்களா? அழகாத்தான் இருக்கா. அதுக்கு நான், என்னாங்க செய்வேன். அழகு— ஒரு குற்றங்களா? அவ; அழகு, நாளைக்கு வேலை செய்யாமலா, அவனைத் தடுத்துவிடப் போகுது! ஐயா, இதை நினையுங்க. நீங்க மவராசனா வாழனும் — என் மானத்தைக் காப்பாத்துங்க. மண்ணை வாரிப் போட்டுடாதீங்க. என் உற்றான் உறவினன் எல்லாம் வந்திருக்கிறாங்க. ஒரு வேளைகூட சோறு போடாமலிருக்கலாங்களா! அவமானமில்லிங்களா! கல்யாண மாச்சே — பாயாசமில்லேன்னாலும் பச்சரிசிச்சாதம்போடாவிட்டாலும், பழம் வைக்கலேன்னாலும், சாதாரண சாப்பாடாவது போடவேணாங்களா?'' இப்படி யெல்லாம், அந்த ஏழை, பேசவில்லை; கேட்கவில்லை. ஆனால், எண்ணினான்.

சேரியை நோக்கிச் சென்று கொண்டிருந்த, அவன் கண்களிலே நீர்! இதயத்திலே புயல்! எண்ணத்திலே தீ! மனதிலே பெரும் போர்!

அந்த ஏழையின் காதுகளில் சேரியிலிருந்து எழும்பும் தம்பட்ட ஓசை கேட்டது.

நெருங்கினான்.

சந்தோஷத்தோடு துள்ளி விளையாடும் சிறுவர்களும் சிறுமிகளும், அதற்கு மத்தியில் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டிருக்கும் பூமாலையும் அவளருகே அகமலர்ச்சியோடு அமர்ந்திருக்கும் பொன்னனும், அவர்களைச் சுற்றி கேலியும் கும்மாளமும்...அவன் பார்த்தான். நீர்த்துளிகளினூடே அந்தக் காட்சியைக் கண்டான்.

இன்று—சந்தோஷம். நாளை? இந்தக் கேள்வி ஒரு பக்கம்.

இப்போது—மகிழ்ச்சி. விருந்து வைக்கவில்லையென்று சொல்லும் போது?

5-ம் பக்கம் பார்க்க

வெளிவந்துவிட்டது!
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
முகவுரையுடன்
'கிருஷ்ணன் — மதுரம்'
வாழ்க்கைப்பாதை
[ஜெகசிற்பியன் எழுதியது]
ஏராளமான போட்டோக்கள்,
நான்கு வர்ண மேலட்டை.
விலை அணா 8
தபாலில் பெற அணா 9 அனுப்ப வேண்டும். வியாபாரிக்கு 25% கழிவு
விவரங்கட்கு:—
"வெண்ணிலா வெளியீடு"
118, பிராட்வே, சென்னை 1.

★ தோழர்களே! ★

கலஞன கட்டடத்தைப் புதுப்பிக்கும் பணி—தூர்ந்து போயுள்ள குளத்தை வெட்டும் அரும்பணி—படர்ந்து போக இருக்கும் தீபத்தைத் தூண்டி நெய்யிடும் சீரிய பணி—வேண்டாம் என்று எவரும் கூறமாட்டார்கள்.

நமது சமூகம், கலஞன கட்டடம் தூர்ந்து கிடக்கும் திருக்குளம்—படர்ந்து விடுமோ என்று எவரும் பயப்படும் நிலையில் உள்ள திருவிளக்கு! இந்தக் கருத்தையும் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர்.

சமூகம் சீர்திருத்தப்பட வேண்டும் என்று அறிவாளர் அனைவரும் கூறுகின்றனர்.

திண்டிவனம் வட்ட, திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் இந்த அரும் பணியின் அவசியத்தையும் மேன்மையையும், நாட்டுமக்கள் அனைவரும், எல்லாக் கட்சியிலும் நேரடியாகத் தொடர்பு கொள்ளாவிடினும், நெஞ்சில் உரமும் நேர்மைத் திறனும் கொண்டு, முற்போக்கை வரவேற்கும் பலப் பலரும், பொதுமக்களும் உணர்ந்திடவும், கருத்துக்களைத் திரட்டி உருவாக்கவுமே, சமூக சீர்திருத்த மாநாடு, நடத்த ஏற்பாடு செய்து வருகிறோம்.

சீரிய நோக்கத்துடன் ஏற்பாடாகும் இம்மாநாடு, தனிச் சிறப்புடன் விளங்கவும், தக்க திட்டம் வகுத்திருக்கிறோம்.

பல்வேறு நாடுகளிலும், மக்களின் வாழ்வு வளம்பெற, வஞ்சனை வீழ, மாசுகள் துடைக்கப்பட, மாவீரர் பலர் அவ்வப்போது பணி புரிந்தனர். வரலாற்றுச் சுவடிகளிலே, உலகைத் திருத்திய அந்த உத்தமர்களின் புகழொளி பொன்னொளியென வீசிடக் காண்கிறோம். எனினும் நம் நாட்டு மக்களோ, உலகைத் திருத்திய உத்தமர்களை அறியார்கள்—அறிந்திடும் வாய்ப்பு பெறவில்லை.

அந்த அரிய வாய்ப்பினைத் தருகிறோம், இம்மாநாடு மூலம்.

சமூக சீர்திருத்த ஆர்வம், தமிழ்ப்பற்று, பேச்சுத்திறன், கொள்கையில் உறுதி எனும் அருங்குணம் படைத்த தோழர்கள், உலகைத் திருத்திய உத்தமர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், அவர்களால் சமூகம் சீர்திருத்தப்பட்ட வகையினையும், எடுத்துரைக்க வருகின்றனர்.

உண்மைக்காக உயிர் துறந்த கிரேக்க நாட்டு மகாமேதை சாக்ரடீஸ், சீமான்களால் சீரழிக்கப்பட்ட சமூகத்தை எள்ளி நகையாடித் திருத்திய வால்டேர், ரூசோ, மனிதனை மனிதன் அடிமையாக்கிய மாபாதகத்தை ஒழித்த ஆப்பிரகாம் லிங்கன், கண்டனத் தீயிலே தள்ளப்பட்ட போதும் கலங்காது பணி புரிந்து வெற்றி பெற்ற மார்டின் லூதர், சதி எனும் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்த அறிஞர் ஏறு, ராஜாராம் மோகன்ராய், வைதீக வல்லடிகளைக் கண்டித்த வேதாந்தி வேமன்ன, நாயாடிகள் என்ற ஜாதியையும் கொண்டிருந்த மலையாள நாட்டிலே மதிவாணராகத் தோன்றி மகத்தான வெற்றிகண்ட நாராயணகுரு, பழங்காலச் சின்னம் என்று பரிகசிக்கப்பட்டுவந்த சீன நாட்டுக்குப் புத்துயிர் ஊட்டிய சன்—யாட்—சென், ஐரோப்பா கண்டத்து நோயாளி என்று பேசப்பட்ட, துருக்கியை வல்லரசாக்கி, மக்களை மதிமிக்கவர்களாக்கிய முஸ்தபா கமால், போன்ற சீர்திருத்த வாதிகளின் வாழ்க்கை வரலாறுகளை, நண்பர்களுக்குத் தென்றலாகவும், மாற்றார்களுக்குப் புயலாகவும் தோன்றும் வகையில் தமிழார்வத்துடன் பேசும் ஆற்றலாளர்களான, தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன், கருணாநிதி, ஏ. கே. வேலன், காஞ்சி கலியாணசுந்தரம், சிற்றரசு, ஆசைத்தம்பி, வில்லாளன், அரங்கண்ணல், போன்ற தி. மு. கழகத் தோழர்கள் எடுத்துக்கூற முன் வருகின்றனர்.

இரவு, மராட்டிய சரிதச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட சந்திரமோகன் நாடகம் நடைபெறுகிறது.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, மாநாட்டைத் துவக்கி வைக்கிறார்—இரவு, நடிக்கிறார்.

தோழர்கள் கே. ஆர். செல்லமுத்து, நாகூர் அனிபா ஆகியோரின் இன்னிசை இருக்கிறது.

இவ்வளவுக்கும் மேலாக சீர்திருத்த ஆர்வமும் பகுத்தறிவுப் பற்றும் மிகுதியாகக் கொண்ட, பிரசண்ட விகடன் ஆசிரியர் தோழர் நாரண துரைக்கண்ணன் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் சிறப்பு இருக்கிறது.

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் சி. என். ஏ., மாநாட்டில் சொற்பொழிவாற்றுவதுடன், நாடகத்தில் நடிக்கிறார்.

சமூகசீர்திருத்தக்கருத்துக்களைக் கூறவும், கேட்கவும் திரண்டு வாரீர் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சமூக சீர்திருத்தம், ஒரு அரிய முயற்சி மட்டுமல்ல, கூட்டு முயற்சி என்பதை மெய்ப்பிக்க வாரீர்.

வைதீகர்களும், சீர்திருத்த முன்னணியின் சிறப்பினைக் காணும் வகையில் திரண்டு வாரீர்!

சமூகம் அழைக்கிறது, அறிவாளிகளை, ஆண்மையாளர்களை!

உலகம் முன்னேறுகிறது நாமும் முன்னேறவேண்டும்—சமூகம் திருந்தினால் தான் நாடு முன்னேறும்—எனவே சமூக சீர்திருத்தம், நமது கடமை—நாட்டுப் பற்று கொண்ட எவரும் புறக்கணிக்க முடியாத கடமை!

எனவேதான் நம்பிக்கையுடன், அழைக்கிறோம், அனைவரையும், வாரீர், வாரீர், என்று.

ஒரு சிறு வட்டத்தார் கூட்டும் மாநாடு என்றாலும், தமிழகத்திலே எங்கெங்கு இருப்பினும், எல்லா சமூக சீர்திருத்தவாதிகளும் இந்த மாநாட்டிலே, பணிபுரிய வரவேண்டும் என்று அழைக்கிறோம்.

பழமை நம்மைப் பரிகசிக்கிறது—இன்றும்!

சீர்திருத்தவாதிகளே! கருத்துக் கணைகளை வீசி, பழமையின் எதேச்சாதிகாரத்தை வீழ்த்திட வாரீர்!

திண்டிவனம் வாரீர் திரண்டு—மே 20-ந்தேதி. அணிவகுப்பில்சேர வாரீர்—அறிவுலகம் அன்புடன் அழைக்கிறது வாரீர்!

—திண்டிவனம் வட்ட தி. மு. க.

Edited Printed & Published by C. N. Annadurai M A at DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram'